**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.74/2016**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9ம் நாள் திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.3 தருமன், வயது 53, த/பெ கண்ணன்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

19. நான் ஆடிட்டரிடமிருந்து பெற்ற ஆவணங்களான பி.வா.சா.ஆ. 13 முதல் 15 வரையானவை 2013 முதல் 2016ம் ஆண்டு வரையான ஆவணங்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு இன்றைய தேதி வரை எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், என்னிடம் ஆவணங்கள் உள்ளது, தேவைப்பட்டால் நான் தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ. 4 முதல் பி.வா.சா.ஆ. 12 வரையான ஆவணங்களில் கோயில் கும்பாபிஷேகம் நடைப்பெற்றதற்கான பத்திரிகைகள் உள்ளது, அதில் எங்கள் நிர்வாகம் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் பொதுவாகதான் நடந்தது, அதில் நிர்வாகம் பெயர் உள்ளது.

20. வாதி கோயிலை நிர்வாகம் செய்து அவர் பெயரில் பதிவு செய்யப்பட்ட விவரம் அறிந்து நாங்கள் வாதியிடம் பிரச்சினை செய்தோம் என்றால் கோயில் கட்டி 16 வருடங்கள் ஆன நிலையில் இன்றுவரை யார் பெயரும் குறிப்பிடாத நிலையில் அவர் பெயர் மட்டும் குறிப்பிட்டதால் பிரச்சினை ஏற்பட்டது. இது சம்மந்தமாக நாங்கள் வாதியை தாக்கி காயப்படுத்தியதாக வாதி ஆரணி கிராமிய காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு நினைவில்லை.

21. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.28ல் வாதிதான் பதிவு செய்து நிர்வாகம் செய்து வருகிறார் என்று கண்டுள்ளது என்றால் மேற்படி ஆவணம் 2015ல்தான் ஏற்பட்டது, நாங்கள் 2014ல் நிர்வாகம் செய்ததற்கான ஆவணம் என்னிடம் உள்ளது. வாதியின் நோட்டீஸ் போர்டை அழித்தது சம்மந்தமாக நாங்கள் வாதியை தாக்கி காயப்படுத்தியதாக வாதி ஆரணி

கிராமிய காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றால் அவர்தான் எங்களை தாக்கினார். என்னுடைய பெயரில் ஆரணி கிராமிய காவல் நிலையத்தில் குற்ற எண்.147/2016 என்ற வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் பொய் வழக்காகும், இந்த வழக்கை தவிர்த்து வேறு எந்த வழக்கும் என் பெயரில் இல்லை.

22. என்னுடைய பண பலத்தை வைத்து மேற்படி குற்ற எண்.147/2016 வழக்கை நான் Mistake of fact என்ற அடிப்படையில் என் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்படாமல் தவிர்த்தேன் என்றால் அதில் எங்கள் தவறு எதுவும் இல்லை என்று அன்றைய சமயத்தில் இருந்த ஆய்வாளர் ரவிசந்திரன் முடித்து வைத்தார். என்னுடைய பண பலத்தை வைத்துதான் குற்றங்களை எனக்கு சாதகமாக பயன்படுத்தி என் மீது எந்த வழக்கும் தாக்கல் செய்யாதவாறு பார்த்துக் கொண்டேன் என்றாலும் அதனால்தான் ஆடிட்டர் அறிக்கையில் காவல் நிலைய செலவு என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல, பொதுமக்கள் சேர்ந்துதான் நிர்வாகம் செய்கிறோம்.

23. இந்த வழக்கை வாதி நிர்வாகம் செய்ய வேண்டும் என்பதற்காகவும், அவரை நாங்கள் இடைஞ்சல் செய்யக் கூடாது என்பதற்காகவும்தான் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி நிர்வாகம் செய்யவில்லை. வாதியின் நிர்வாகத்தில் நாங்கள் தலையிட்டதால்தான் அவர் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும், நாங்கள் யாரும் கோயிலை நிர்வாகம் செய்யவில்லை என்றால் சரியல்ல, நாங்கள்தான் நிர்வாகம் செய்து வருகிறோம். வழக்கு நிலுவையில் இருக்கும் போது மனு எண்.251/2016 என்ற இடைக்கால மனுவை தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

24. மேற்படி மனு தள்ளுபடி ஆனதன் பேரில் வாதி ஆரணி சார்பு நீதிமன்றத்தில் CMA 1/2017 என்ற மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. அந்த மனுவில் என்னை 2வது எதிர்மனுதாரராக சேர்த்துள்ளார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மனுவில் வக்காலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேனா என்ற

விவரத்தை சரி பார்க்கலாமா என்றால் சரி பார்க்கலாம். மேற்படி மனு எண். 251/2016 தள்ளுபடியான சமயம் நாங்கள் எங்கள் ஊரில் பிட் நோட்டீஸ் அடித்து வசூல் செய்தோம் என்றால் சரிதான்.

25. மேற்கண்ட சட்ட விரோத செயல்களை கண்டித்து வாதி CMA 1/2017 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. 24.01.2023 அன்று மேற்படி மேல் முறையீட்டு மனுவிற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, உத்தரவில் Status quo உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அது வா.சா.ஆ.25 மற்றும் வா.சா.ஆ 26 ஆக தாக்கல் செய்துள்ளோம்' என்றால்' எங்களுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரியாது, தெரிந்திருந்தால் நாங்கள் அவ்வாறு செய்திருக்க மாட்டோம்.

26. மேற்படி உத்தரவை தெரிந்துதான் அவ்வாறு நாங்கள் செய்தோம் என்றால் சரியல்ல, வாதிதான் எங்களிடம் பிரச்சினை செய்தார், அதேப்போல் வாதிதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார், நாங்கள் இல்லை. நாங்கள் தலைவர், செயலாளர், பொருளாளர் சேர்ந்து ஒன்று கூடிதான் முடிவு எடுப்போமா அல்லது தனித் தனியாக முடிவு எடுப்போமா என்றால் ஒன்று கூடிதான் முடிவு எடுப்போம். வாதி எங்களிடம் மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை காட்டி புனரமைப்பு எதுவும் செய்யக்கூடாது என்று கூறியும், நாங்கள் அதை மதிக்காமல் புனரமைப்பு பணிகளை மேற்கொண்டோம் என்றால் சரியல்ல, வாதி எங்களிடம் அவ்வாறு எடுத்து கூறவில்லை.

27. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வா.சா.ஆ.5 Crl.O.P.17234/2016 தாக்கல் செய்யப்பட்டு அதில் நான் எதிர்தரப்பினராக உள்ளேன் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி அழைப்பாணை வந்துள்ளதா என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. 09.08.2016 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில் காவல் நிலையம் தலையிட கூடாது என்று குறிப்பிட்டு சுட்டிக்காட்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு ஞாபகமில்லை.

28. மேற்படி உத்தரவில் கோவில் நிர்வாகத்தில் காவல் நிலையம் தலையிடக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. அதன் பின்னிட்டுதான் தாலுக்கா அலுவலகத்தில் சமாதான கூட்டம் நடைபெற்றது என்றால் சரிதான், அதில் நாங்கள் அவர்கள் எடுத்த முடிவிற்கு கட்டுப்பட்டு அதில் கையொப்பம் இட்டோம், ஆனால் வாதி கையொப்பமிடாமல் மீண்டும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு சென்றார். செய்யார் கோட்டாட்சியர் அலுவலகத்தில் சமாதான கூட்டம் நடைப்பெற்றது என்றால் சரிதான்.

29. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மற்றும் ஆரணி சார்பு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட் மனுவின் உத்தரவையும் மதிக்காமல் நாங்கள் தன்னிச்சையாக செயல்பட்டு வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் 3 பேர் சேர்ந்துதான் மேற்படி டிரஸ்டை நடத்தி வருகிறோம் என்றாலும், பொது மக்கள் ஒத்துழைப்பு இல்லாமல் நிர்வாகம் செய்கிறோம் என்றால் சரியல்ல, 2014ல் தீர்மானம் நிறைவேற்றி நிர்வாகம் செய்து வருகிறோம். 2014ஆம் ஆண்டு அறிக்கையை தவிர இன்றைய தேதி வரையான 10 வருடத்திற்கான எந்த அறிக்கையையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் உள்ளது, தேவைப்பட்டால் தாக்கல் செய்வோம், தற்போது என்னிடம் இல்லை.

30. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தி விட்டு நாங்கள் வருடா வருடம் மீட்டிங் எதுவும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள நிபந்தனைகளை நாங்கள் கடைப்பிடிக்காமல் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற வீம்பிற்காக அதை பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. கோயிலுக்கான சொத்து வரியை நாங்கள் கட்டி அதற்கான ரசீதை நீதிமன்றத்தில' தாக்கல' செய்துள்ளோமா என்றால' தாக்கல' செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறோம்.

31. மின் கட்டண ரசீது டிரஸ்ட் என்ற பெயரில்தான் கட்டணம் கட்டி பெற்று வருகிறோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களை நாங்கள் வாதி நிர்வாகம் செய்ய தடை செய்வதற்காகதான ' மேற்படி ஆவணங்களை ஏற்படுத்தினோம ' என்றால் சரியல்ல. இன்றைய தேதி வரை வரவு செலவு கணக்கு என்னிடம் உள்ளது என்றால் சரிதான்.

அது சம்மந்தமாக நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறோம்.

32. எங்கள் பண பலத்தை பயன்படுத்தி காவல் நிலையம் மற்றும் தாலுக்கா அலுவலகத்தின் உதவியோடு வாதியின் நிர்வாகத்தை தடுத்ததால்தான் அவர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், வழக்கு நிலுவையில் உள்ள போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை மதிக்காமல் செயல்பட்டு வருகிறோம் என்பதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni